18.3.2015

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ***<u>சீசனுக்கு தயாராகும் குன்னூர் சிம்ஸ் பூங்கா</u>***



குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மே மாதம் கோடை விழா நடைபெறவுள்ள தால், இந்தப் பகுதி ஏரியில் உள்ள மீன்களை அகற்றும் பணி செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. நீலகிரி மாவட்டம், குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மே மாதம் நடைபெறும் கோடை விழாவை முன்னிட்டு, பழக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இதன் காரணமாக, சிம்ஸ் பூங்காவைப் புதுப்பிக்கும் பணிகளுக்காக ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. இதில், ஏரியில் தடுப்புச் சுவர் அமைக்க ரூ. 40 லட்சமும், நடைபாதை அமைக்க ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டது. இதையடுத்து, ஏரியில் உள்ள மீன்களை உயிருடன் பிடித்து எம்ஆர்சி ஏரி உள்ளிட்ட இதர ஏரிகளில் தாற்காலிக மாக வளர்க்க முடிவெடுக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக இந்தப் பகுதியில் பெய்த மழை காரணமாக ஏரி சேரும், சகதியுமாக மாறியது. இதனால், மீன்கள் செத்து மடியும் சூழல் ஏற்பட்டது. இதை யடுத்து, மீன்களைக் காப்பாற்ற 30-க்கும் மேற்பட்ட மீன் பிடியாளர் களைக் கொண்டு வலையில் சிக்கும் பெரிய மீன்களை விற்பனைக்கும், சிறிய மீன்களை வேறு ஏரிகளில் வளர்க்கவும் திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக சிம்ஸ் பூங்கா அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 24-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மார்ச் 17: திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் மார்ச் 24-ம் தேதி நடைபெற உள்ளது. திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, பல்லடம், ஊத்துக்குளி, அவிநாசி வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காணும் வகையில், திருப்பூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் அன்றைய தினம் காலை 11 மணிக்கு நடைபெற உள்ள கூட்டத்துக்கு சார்-ஆட்சியர் தலைமை வகிக்க உள்ளார். திருப்பூர் கோட்டத்துக்குள்பட்ட விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று, தங்கள் குறைகளை நேரடியாகவோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவித்து பயன்பெறலாம் என சார் ஆட்சியர் (பொறுப்பு) ராஜன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## சூரிய ஒளி பம்புசெட்டுகளுக்கு மத்திய அரசு நிதியுதவி

சூரிய ஒளி விவசாய பம்புசெட்டுகளுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது என மக்களவையில் பதில் அளிக்கப்பட்டது. தஞ்சாவூர் எம்.பி. கு. பரசுராமன் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மக்களவையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தஞ்சாவூர் எம்.பி. கு. பரசுராமன் சூரிய ஒளியால் அமைக்கப்படும் விவசாய பம்புசெட் களுக்கு புதுப்பிக்கவல்ல எரிசக்தி கழகம் தொழில்நுட்ப, நிதி உதவிகளை மாநிலங்களுக்கு வழங்குகிறதா எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி துறை அமைச்சர் பியூஷ் கோயல், வழிகாட்டு நெறிமுறைகளின் படி, சூரிய ஒளியால் அமைக்கப்படும் விவசாய பம்பு செட்களுக்குப் புதுப்பிக்கவல்ல எரிசக்தி கழகம் தொழில்நுட்ப, நிதி உதவிகளை மாநிலங்களுக்கு வழங்குகிறது என்றும், தமிழ்நாட்டில் 2014-15 ஆம் ஆண்டில் ரூ. 6.64கோடி அளிக்கப்

பட்டுள்ளதாகவும், நாடு முழுவதும் ரூ. 39.73 கோடி வழங்கப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

## <u>மார்ச் 22 வரை கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்: ஆட்சியர்</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் மார்ச் 22-ம் தேதி வரை நடைபெறும் கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி முகாமில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வெளியிட்ட செய்திக்குறிப்பு: கால்நடைகளை தாக்கும் கால் மற்றும் வாய் நோய்க்கான தடுப்பூசி, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மார்ச் 1-ம் தேதி முதல் போடப்பட்டு வருகிறது. 19-ம் தேதி செங்குணம், அருமடல், பாலம்பாடி, ரெங்கநாதபுரம், கை.களத்தூர், சிறுநிலா, பெருநிலா, பசும்பலூர், கீழப்பெரம்பலூர் (வ- தெ), பெரியார் நகர், திருவளக்குறிச்சி, ஊத்தங்கால் ஆகிய கிராமங்களிலும், 20-ம் தேதி கவுல்பாளையம், ரெங்கநாதபுரம் (தெ), பிரம்மதேசம், வாலிகண்டபுரம், மேட்டுகாளிங்கராயநல்லூர், பள்ளகாளிங்கராயநல்லூர், வசிஷ்டபுரம், அகரம் சிகூர், வயலூர், கருப்பட்டாங்குறிச்சி, அகரம் சிகூர் பார்டர், ஜமீன் ஆத்தூர், நாரணமங்கலம், விஜயகோபாலபுரம் ஆகிய கிராமங்களிலும், 21-ம் தேதி குரும்பலூர், மூலக்காடு, புதுநடுவலூர், எறையூர், பேரையூர், மங்கலமேடு, ரஞ்சன்குடி, பனங்கூர், மருவத்தூர், பேரளி, மருதடி, தெரணி ஆகிய கிராமங்களிலும், 22-ம் தேதி பெரியவடக்கரை, பி.மாவிலங்கை, பாண்டகப்பாடி, ஒதியம், சித்தளி, லட்சுமிபுரம், அசூர், காரை, புதுக்குறிச்சி ஆகிய கிராமங்களிலும் தடுப்பூசிப் போடப்பட உள்ளது. சம்பந்தப்பட்ட கிராமங்களை சேர்ந்த கால்நடை வளர்ப்போர் தடுப்பூசிப் போட்டு பயன்பெறலாம்.


## நீர்பிடிப்பு பகுதியில் மழை: சேர்வலாறு, கருப்பாநதி அணை நீர்மட்டம் உயர்வு

நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் மழையால் சேர்வலாறு, கருப்பாநதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 46, சேர்வலாறு அணை 27, மணிமுத்தாறு அணை 22, கடனாநதி அணை 2, ராமநதி அணை 14, கருப்பாநதி அணை 32, குண்டாறு அணை 4, அடவிநயினார் அணை 7, அம்பாசமுத்திரம் 4, சேரன்மகாதேவி 6.2, களக்காடு 18.4, நான்குனேரி 13, ஆலங்குளம் 44.4, செங்கோட்டை 2. நீர்வரத்து அதிகரிப்பு: நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 700 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 410 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 20 கனஅடியும், கடனாநதி அணைக்கு 40 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 79.55 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 89.70 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 28 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 25 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 40 அடியாகவும், அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 29 அடியாகவும் இருந்தது. நீர்வரத்து அதிகரித்ததால் கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 27.89 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 92.75 அடியாகவும் இருந்தது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வறண்ட மண்ணில் அசத்தும் "அல்போன்சா'



உலகம் தெரியாத விவசாயியாக இருந்தால் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டும் பலன் இல்லாமல் போகும். விவசாயி வியாபாரியாக மாறினால் இந்த உலகமே திரும்பிப்பார்க்கும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார் சிவகங்கையை சேர்ந்த விவசாயி முருகேசன். வறண்ட மண்ணான சிவகங்கை எ.கருங்குளத்தை சேர்ந்த இவரது பண்ணை 2,000 ஏக்கர். பண்ணைக் குட்டைகளுடன் தென்னந்தோப்பு என பலவகை மரங்களை வளர்த்து வருகிறார். வறட்சியில் இந்த கிராமம் தத்தளித்த போது பிழைப்புக்காக வேறு ஊருக்கு புலம் பெயர்ந்த இவர் பல தொழில்கள் செய்தாலும், கடைசியாக தேர்வு செய்தது விவசாயம். "அல்போன்சா' மாம்பழம் அதிக விலையில் விற்பதை பார்த்து, தோட்டத்தில் அதை அமைக்கும் விருப்பத்தை விவசாய பல்கலையிடம் கேட்டுள்ளார். இந்த மண்ணில் அது வளராது என கூறியதை கேட்டு, அதையே சவாலாக எடுத்து முதல்கட்டமாக 20 ஏக்கரில் மா சாகுடியை துவங்கி இன்று பெரும் ஏற்றுமதியாளராகவும் மாறியுள்ள முருகேசன் கூறியதாவது: 25 ஆண்டுகளுக்கு முன்பே எனக்கு இயற்கை உரம் மீது தான் நம்பிக்கை இருந்தது. 15 டன் மண்புழுவை தோட்டத்தில் கொட்டி மண் வளத்தை பெருக்கினேன். 4 இடங்களில் பண்ணை குட்டைகள் அமைத்து மழைநீரை சேமித்து வந்ததால், நிலத்தடிநீர்மட்டம் பாதுகாக்கப் பட்டது. மகாராஷ்டிராவில் இருந்து மாங்கன்றுகள் வாங்கி ஏக்கருக்கு 40

மற்றும் 66 மரங்கள் வீதம் நடவு செய்தேன். மூன்று மாதத்திற்கு ஒரு முறை களை எடுப்பதற்காக உழவு செய்து, அந்த களைகளே உரமாக்கினேன். சொட்டு நீர் பாசனத்தில் அனைத்து மரங்களும் நல்ல பலனை கொடுத்தது. மும்பையில் ஒரு பழம் ரூ.60க்கு விற்பனையானது. அதே பழம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டால் இன்னும் அதிக வருவாய் கிடைக்கும் என மகன் மதிபாலன் அதற்கான முயற்சிகள் எடுத்தார். விவசாயி வியாபாரியாக மாறினால் தான் விவசாயிக்கு உண்மையான பலன் கிடைக்கும், என்பதையும் நிரூபித்தோம். இந்த பழங்களை பேக்கிங் செய்வதற்கு ஜார்கண்ட் தொழி லாளர்கள் ஈடுபடுகின்றனர். மரத்தில் இருந்து விளைந்த மாங்காயை அதன் காம்போடு 3 அங்குலத்தில் "கட்' செய்து, அதை பெட்டியில் வைக்கோல் சுற்றி வெளியிடங்களுக்கு அனுப்புகிறோம். இதற்கு தனி வரவேற்பு உள்ளது. இன்னும் சில மாதங்களில் இதன் சீசன் களை கட்டும். இந்த ஆண்டு நல்ல வருவாய் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளேன், என்கிறார். இந்த சாதனை விவசாயி முருகேசனை வாழ்த்த - 94865 61677ல் அழுத்தலாம். **-டபிள்யு.எட்வின், மதுரை.**

***<u>சின்ன சின்ன செய்திகள்</u>***



கத்தரியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு - தண்டு மற்றும் காய்த்துளைப்பான்: நடவு செய்த 15-20 நாட்கள் கத்தரிச் செடியின் நுனித்தண்டுகள் இலைகளுடன் காய்ந்து தலை காய்ந்து தொங்கி காணப்படும். அவைகளின் இலை உள்ளே பார்த்தால் வெள்ளைநிற புழு காணப்படும். இவ்வகைப் புழுக்கள் காய்கள் பிஞ்சாக இருந்து வளர்ந்து வரும் சமயத்தில் காய்களை குடைந்து சாப்பிட்டு சேதப்படுத்தும்.

இதனைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட செடிகளின் நுனித் தண்டினை கிள்ளி எறிந்து விட வேண்டும். பாதிக்கப்பட்ட காய்களைப் பறித்து அழித்து விட வேண்டும். காய்களில் 50 சதத்தூளை ஒரு லிட்டருக்கு 2-4 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். காய்களைத் தாக்கும் பருவத்தில் 15 நாட்களுக்கு ஒருமுறை குயினால்பாஸ் 25 இசி. 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருடன் 2 மில்லி வேப்பெண்ணெய் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து கலவையுடன் சேர்த்து தெளிக்க வேண்டும். அல்லது வேப்பங்கொட்டைச்சாறு 50 மில்லியை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

**பச்சை மிளகாய்:** 1 ஏக்கர் நிலத்தில் 40 டன் பச்சை மிளகாயை அறுவடை செய்து சாதனை படைத்துள்ளார். விழுப்புரம், பிடாகம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அறிவழகன் சொட்டுநீர்ப் பாசனத்தின் கீழ் மிளகாய் சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம். முதற்கட்டமாக உலிக்கலப்பை, சட்டிக்கலப்பை, கொக்கிக் கலப்பை போன்றவற்றை பயன்படுத்தி, மண்ணை பொலபொலவென்று உழுது, பின் 7 டன் தொழுஉரம் இட்டு மீண்டும் நன்றாக உழுது கடைசி உழவிற்கு முன்பாக விரிடி, சூடோமோனாஸ் போன்ற உரங்களை இட்டு அதன்பின் ஓர் உழவு உழுது கொள்ள வேண்டும். பின்னர் அரை அடி இடைவெளியில் 5 அடி அகலத்திற்கு பார் அமைத்து, பார் ஒன்றுக்கு இரண்டு அடி இடைவெளியில் இரண்டு வரிசைகள் அமைத்து, செடிக்குச்செடி இரண்டரை அடி இடைவெளியில் 35 நாட்களான பச்சை மிளகாய் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். 1 ஏக்கருக்கு மொத்தம் 10,000 நாற்றுகள் தேவைப்படும். US எனப்படும் விதை நிறுவனத்தின் US 244 என்ற உயர் ரகத்தை, நாற்றுகள் அனைத்தும் குழித்தட்டு முறையில் விவசாயியே உற்பத்தி செய்கிறார். மேலும் விபரங்களுக்கு அறிவழகன், 9865654219.

**பார்த்தீனியம் களைக்கட்டுப்பாடு:** கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும்

அதிக அளவு பாதிப்பை ஏற்படுத்தும். 15-20 மீட்டர் உயரம் வரை வளரும். மேய்ச்சலுக்குச் செல்லும். கால்நடைகளின் உடலில் மோதுவதாலும் தோல் நோய், தோலின் நிறம் மாறி அரிப்பு ஏற்படுதல் மற்றும் நீர் வடிதல் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. பார்த்தீனியம் செடியின் மகரந்தங்கள் (Pollen) மனிதர்களுக்கும் பெரிய தீங்கினை விளைவிக்கிறது. அதனால் தோல் அரிப்பு ஏற்படுகிறது. இந்த மகரந்தம் காற்றின் மூலம் பரவி, அதை சுவாசிக்க நேரிடும் போது ஆஸ்துமா, காய்ச்சல் மற்றும் நுரையீரல் சம்பந்தமாக நோய்கள் ஏற்படுகிறது. பூக்கள் உருவாகுவதற்கு முன்பாகவே வேருடன் செடியினைப் பிடுங்கி எடுத்து விட வேண்டும். அதிக அளவில் களை இருக்கும் போது குழியில் இட்டு மக்க வைத்து உரமாகப் பயன்படுத்தலாம். சீரகம்: 2வது வாரத்தில் களை எடுக்க வேண்டும். மேகமூட்டம் இல்லாத நாட்களில் நீர் பாய்ச்ச வேண்டும். சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த கந்தகத்தூளை எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் அதிகாலை நேரத்தில் செடியின் மீது தூவ வேண்டும். அல்லது 0.20 சத கரையும் கந்தகத் தூளை 100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் என்ற அளவில், சமமாக 0.1 சத காலிக்ஸின் 100 லிட்டர் தண்ணீரில் 100 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். தேவையைப் பொறுத்து 15-20 நாட்களில் மீண்டும் தெளிக்க வேண்டும். **- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>மாம்பழங்களைப் பழுக்க வைப்பது எப்படி</u>



மாம்பழ சீசன் ஆரம்பித்து விட்டது. காய்கள் கடைகளுக்கு வந்துள்ளன. இந்நேரத்தில் மாங்காய்களை எப்படி பழுக்க வைக்கலாம் என மக்களுக்கு தெரிவிப்பது சரியான தாக இருக்கும் என நம்புகிறேன். மாம்பழங்களை

நன்கு முன்றும் முன்பே விவசாயிகள் அறுவடை செய்ய தொடங்கி விடுகின்றனர். அவற்றைத் தரம் பிரித்து, இயற்கையாகப் பழுக்க வைத்தால் 1 வாரம் முதல் 2 வாரம் ஆகி விடுகிறது. ஆனால் சீராகப் பழுக்காமல், எடை, தரம், நிறம், ருசி சீராக இருப்பதில்லை. இதில் எத்திலீன் வாயு பயன்படுத்தி 3 வகைகளில் பழுக்க வைக்கலாம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, மதுரை வேளாண் அறிவியல் மையம்கொடுத்துள்ளஆலோசனைகள்:

**முதல் முறை**: முதலில் 100 லிட்டர் தண்ணீர் 50 டிகிரி சி சூடான தண்ணீரில் 62.5 மில்லி லிட்டர் எத்திலீனைக் கலக்க வேண்டும். அந்த நீரில் 100 கிலோ மாம்பழங்களை 5 நிமிடம் வைக்க வேண்டும். இந்த நீரை 4 முறை பயன்படுத்தலாம். பின் நீரை வடித்து மாம்பழங்களை வைக்கோலில் பரப்பி வைக்க வேண்டும். 3 முதல் 5 நாட்களில் நன்கு பழுத்து விடும். இந்நீரை 500 மாம்பழங்களுக்கு பயன்படுத்தலாம்.

**இரண்டாம் முறை**: 2 மில்லி லிட்டர் எத்திலீனை மாம்பழங்களை (காய்) வைத்துள்ள அறையில் ஆங்காங்கே ஒரு குவளையில் வைத்து, மாத்திரை சோடியம் டை ராக்சைடை இடையில் வைத்து, அந்த அறையை காற்றுப் புகாதவாறு மூடி வைக்க வேண்டும். 4-5 நாட்களில் பழுத்து விடும்.

**மூன்றாம் முறை**: பிளாஸ்டிக் கிரேடுகளில் பழுக்க வைக்க இருக்கும் காய்களை அடுக்க வேண்டும். இடையில் காகிதம் போட வேண்டும். ஒரு கிரேடுக்கும் அடுத்த கிரேடுக்கும் குறைந்தது 1 முதல் 2 அடி இடைவெளி வேண்டும். கிரேடின் அடிப்பகுதி 10 செ.மீ. உயரத்தில் (தரை மட்டத்தில் இருந்து) இருக்குமாறு வைக்க வேண்டும். பின் கிரேடுகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி, அறையில் எத்திலீனைத் தெளிக்க வேண்டும். அறையை மூடி வைத்தால் 48 மணி நேரத்தில் நன்கு பழுத்து விடும். இதே முறையில் பப்பாளி, வாழை போன்ற எந்த பழத்தையும் பழுக்க வைக்கலாம். இதனால் மனிதர்களின் ஆரோக்கியத்திற்கு எவ்வித கேடும் இல்லை. எத்திலீன் இரசாயனப் பொருட்கள் விற்கும் கடைகளில்

கிடைக்கும். இம்முறைகள் பற்றி ஏதேனும் சந்தேகம் வந்தால் அணுக வேண்டிய முகவரி. முனைவர் தி.ரங்கராஜ், பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் சோ.கமல சுந்தரி, வேளாண்மை அறிவியல் நிலையம் (K.V.K) த.நா. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரை- 625 106.போன்:0452-2422955,இமெயில்:
kvkmdu@tnau.ac.in, www.tnau.ac.in. **-எம்.ஞானசேகர், விவசாய ஆலோசகர் 93807 55629**

**மீண்டும் மஞ்சளுக்கு கிராக்கிகுவிண்டாலுக்கு ரூ.400 உயர்வு**

ஈரோடு:மாரியம்மன் கோவில் பண்டிகையையொட்டி, 10 நாட்கள் விடுமுறை நெருங்கி வருவதால், ஈரோடு மஞ்சள் மார்க்கெட்களில், வர்த்தகம் சூடுபிடித்துள்ளது. குவிண்டால், 8,499 ரூபாய் வரை அதிகபட்சமாக விற்பனையானது.தொடர் வறட்சி, இடைத்தரகர்கள் ஆதிக்கம், உற்பத்தி சரிவு போன்ற காரணங்களால், மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்காமல், விவசாயிகள் தத்தளிக்கின்றனர்.இதற்கிடையே, பிற மாநில உற்பத்தி அதிகரிப்பால், வடமாநிலத்திலும் வியாபாரிகள் மஞ்சளை வாங்குவதால், ஈரோடு சந்தையில் மஞ்சளுக்கான விலையில் தொடர்ந்து ஏற்ற, இறக்கம் காணப்படுகிறது.ஈரோடு நகரின் முக்கிய பண்டிகையான, பெரியமாரியம்மன் கோவில் பண்டிகை, மார்ச், 21ல் கம்பம் நடப்பட்டு, பொங்கல் பண்டிகை ஏப்ரல்,1ல் கொண்டாடப் படுகிறது. பண்டிகையை முன்னிட்டு, மஞ்சள் சந்தைக்கு, பத்து நாட்கள் வரை விடுமுறை விடப்படும் என்பதால், மஞ்சள் விற்பனை மீண்டும் சூடுபிடித்துள்ளது. இதுகுறித்து, ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் கூறியதாவது:கடந்த வாரம், வர்த்தக துவக்க நாட்களில், விரளி குறைந்தபட்சம், 8,114 முதல் அதிகபட்சமாக, 8,340 ரூபாய் என விற்பனையானது. வார துவக்கத்தை காட்டிலும் வியாழன், வெள்ளி கிழமையில், மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று, விவசாயிகள்

அதிகளவில் மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வருவர். வார துவக்கத்தில், வர்த்தகம் மந்தமாகவே இருக்கும்.ஆனால், ஈரோடு மாரியம்மன் கோவில் பண்டிகையை முன்னிட்டு, அதிக நாட்கள் விடுமுறை இருக்கும் என்பதால், இருப்பு மஞ்சளை விற்கவும், அத்தியாவசிய செலவுக்காகவும், விவசாயிகள் அதிகளவில் மஞ்சள் கொண்டு வருகின்றனர். இதனால் இந்த வாரம், வாரத்தொடக்க நாளிலேயே, நல்ல விலை கிடைத்து வருகிறது. கடந்த, 16ம் அதிகபட்சமாக விரளி, 8,409 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று, 400 ரூபாய் வரை அதிகரித்து, 8,499க்கு விற்பனையானது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, நேற்று, 662 மூட்டை வரத்தான நிலையில், 661 மூட்டை விற்பனையானது. வெளிச்சந்தையில் விரளி அதிகபட்சமாக, 8,479க்கும், சேலம் மார்க்கெட்டில் விரளி அதிகபட்சமாக, 10,189க்கும் விற்பனையானது. ஈரோடு மற்றும் கோபி சொசைட்டியிலும், முறையே, 8,489, 8,409க்கு விற்பனையானதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். பண்டிகை விடுமுறை வரை, இதே நிலை தொடரும், என, எதிர்பார்க்கிறோம்,என்றனர்.

**சத்தியில் காளிஃப்பிளவர்கூவிக்கூவி விற்பனை**

சத்தியமங்கலம்:சத்தியமங்கலம் பகுதியில் நேற்று, வாரச்சந்தையை முன்னிட்டு காளிஃப்பிளவர், ஆட்டோவில் வைத்து கூவிக்கூவி விற்பனை செய்தனர். சத்தியமங்கலத்தில் ஒவ்வொரு வாரமும், செவ்வாய் கிழமை வாரச்சந்தை கூடுவது வழக்கம். இதனால், சத்தியமங்கலம் மட்டுமின்றி சுற்றியுள்ள கிராம மக்கள், வாரச்சந்தைக்கு வந்து, ஒரு வாரத்துக்கான காய்கறிகள் மற்றும் மளிகை சாமான்கள் வாங்கி செல்வது வழக்கம். இந்த வாரச்சந்தையில், வெளியூர் வியாபாரிகள் அதிகமாக வியாபாரம் செய்வர். இவர்கள், லாபத்தை மட்டும் முதன்மையாக கொண்டு விற்பனை செய்யாமல், மற்ற கடைகளை காட்டிலும், விலை குறைவாக கொடுத்து, அதிகளவில் விற்பனை செய்வர். நேற்றைய சந்தையில்,

ஆட்டோக்களில் காளிஃபிளவரை கொண்டு வந்த, ஒரு பூ, பத்து ரூபாய்க்கு விற்பனை செய்தனர்.நீலகிரி மாவட்டம் உட்பட பல்வேறு பகுதிகளில், மொத்தமாக, குறைந்த விலைக்கு இவற்றை வாங்கி வந்து, சத்தியமங்கலம் உட்பட பல்வேறு பகுதிகளில், ஆட்டோக்களில் கொண்டு, விற்பனையில் ஈடுபட்டனர். சீசன் நேரம் என்பதால், அதிக ஆர்வத்துடன், மக்களும் வாங்கி சென்றனர்.

**<u>பாசன நீரால் பூத்து குலுங்கும் எள் பயிர்</u>**

சத்தியமங்கலம்:சத்தியமங்கலம் பகுதியில், கீழ்பவானி வாய்க்கால் தண்ணீரால் விதைக்கப்பட்ட எள் பயிர், தற்போது பசுமையாய் பூத்து குலுங்குகிறது.சத்தியமங்கலம் பகுதி விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பகுதியாகும். இப்பகுதியில் வசிக்கும் மக்கள், விவசாயம் மற்றும் அதை சார்ந்துள்ள தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். கடந்த ஆகஸ்ட், 15ம் தேதி, பவானிசாகர் அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. எள் பயிருக்காக திறந்துவிடப்பட்ட இந்த தண்ணீரால், நிலத்தடி நீர் மட்டமும், பாசன கிணறுகளிலும் தண்ணீர் மட்டம் உயர்ந்தது.விவசாய கிணறு உள்ள விவசாயிகள், நீர மட்டம் உயர்ந்ததால், தங்கள் வயல்களில் நெற்பயிர் நடவு செய்தனர். மொத்த பரப்பளவில் கிணற்று பாசனம் உள்ள பகுதி குறைவே. மீதம் உள்ள பாசனப்பகுதிகள், கீழ்பவானி வாய்க்கால் தண்ணீரை நம்பியே உள்ளது. இந்த நிலங்களில், விவசாயிகள், பொதுப்பணித்துறையினர் மற்றும் வேளாண் துறையினர் யோசனைப்படி, எள் பயிர் விதைத்தனர். தற்போது, இந்த எள் பயிர் பசுமையாக வளர்ந்து, வெள்ளை நிறத்தில் பூத்து குலுங்குகிறது. இன்னும் சில நாட்களில், எள் பயிர் அறுவடைக்கு தயாராகும். கடந்த சில ஆண்டாக, மழை இன்றி, குறைந்த அளவே எள் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பாண்டு, மழை மற்றும் நிலத்தடி நீர் ஒத்துழைத்ததால், கூடுதலாக எள் பயிரிட்டுள்ளனர்.

## <u>கிராமப்புற கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி துரிதம்</u>

மஞ்சூர் : கால்நடைகளால் வன விலங்குகளுக்கு நோய் பரவாமல் இருக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மஞ்சூர் குந்தா வனத்துறை சார்பில், மாவட்ட வன அலுவலரின் உத்தரவுப்படி, வனப்பகுதியை ஒட்டியுள்ள எல்லையோர கிராமங்களில் உள்ள கால்நடைகளால், விலங்குகளுக்கு நோய் பரவாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.முதற்கட்டமாக, கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது.இதில், மஞ்சூர் அடுத்துள்ள கோலிஹட்டி, மேல்குந்தாவில் நடந்த முகாமில் கால்நடை மருத்துவர் கார்த்திகேயன் கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசிகளை போடும் பணிகளில் ஈடுபட்டார். முகாமில், குந்தா வனத்துறை ரேஞ்சர் முத்து கிருஷ்ணன், வனவர்ரவி மற்றும் வனத்துறை ஊழியர்கள் பங்கேற்றனர்.

## <u>திண்டுக்கல்லில் கேரள முள்சீத்தா சாகுபடி</u>

திண்டுக்கல்: கேரள முள்சீத்தா சாகுபடி செய்ய விவசாயி ஒருவர் முயற்சி மேற்கொண்டுள்ளார். கேரளாவில் மருத்துவ பயிராக முள்சீத்தா சாகுபடி செய்யப்படுகிறது. இதற்கு நோய் எதிர்ப்புசக்தி அதிகமாக உள்ளது. நான்கு ஆண்டுகளில் மகசூல் கிடைக்கும். ஒரு பழம் ரூ.400 வரை விற்கப்படுகிறது. இவற்றை திண்டுக்கல் அருகே மெட்டூரை சேர்ந்த இயற்கை விவசாயி சி.ஐ.ஜெயக்குமார் கால் ஏக்கரில் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளார். இதற்காக கேராளவில் இருந்து மரக்கன்றுளை வாங்கி வைத்துள்ளார். விவசாயி கூறியதாவது: கேரளாவில் முள்சீத்தா மரமாக வளர்கிறது. அவற்றை இயற்கை விவசாய முறையில் வளர்க்க உள்ளேன். மரமாக வளரவிடாமல் கவாத்து முறையில் செடியாக வளர்க்கப்படும். இதற்கு பஞ்சகாவ்யம், அசோஸ்பைரில்லம், ரைசோபியம், சூடாமோனஸ், மாட்டு எலும்பு சாம்பல் போன்ற இயற்கை நுண்ணூட்ட சத்துகளை பயன்படுப்படும். இதனால் காய்களின் வளர்ச்சி, மகசூல் நன்றாகஇருக்கும்,என்றார்.

## விதை சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழாவிற்கு தயார்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் புதியதாக கட்டப்பட்ட விதை சுத்திகரிப்பு நிலையம், விதை சேமிப்பு கிடங்கு கட்டும் பணிகள் முடிந்து திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ளது. கள்ளக்குறிச்சி கச்சிராயபாளையம் சாலையில் உள்ள வேளாண் துறையின் விதை சுத்திகரிப்பு நிலையத்தில் விவசாயிகளின் நெற்பயிர்களை ஆய்வுக்கு பின்பு விதைக்காக கொள்முதல் செய்கின்றனர். விதைகளை சுத்திகரித்து வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு நெல் சான்றுடன் அனுப்புகின்றனர். கள்ளக்குறிச்சி விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான புதியதாக விதை சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கினர். இடவசதியில்லாததால் இயந்திரத்தை பயன்படுத்த முடியவில்லை. இதனால் விதை கிராம திட்டத்தில் புதிய இயந்திரத்தின் மூலம் விதைகளை சுத்திகரிப்பு செய்வதற்கும், விதை சேமிப்பு கிடங்கு கட்டவும் 37 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டுமான பணிகள் கடந்த 2013ம் ஆண்டு நவம்பர் மாதம் துவங்கியது. தற்போது 500 டன் கொள்ளளவு விதை சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 1,000 டன் கொள்ளளவு விதை சேமிப்பு கிடங்கு கட்டும் பணிகள் முழுவதும் முடிந்து திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ளது.

## சிறுதானியங்கள் சாகுபடிவங்கி அதிகாரி வலியுறுத்தல்

குளித்தலை:கரூர் மாவட்டம் குளித்தலை அருகே நபார்டு வங்கி சார்பில், சின்னரெட்டிப்பட்டி, அரசு நடுநிலைப்பள்ளியில், சிறு தானிய வகைகள் உற்பத்தி மற்றும் அவற்றிலிருந்து மதிப்பு ஊட்டப்பட்ட உணவு வகைகள் தயாரிப்பு பற்றிய, ஆறு நாள் பயிற்சி முகாம், பொருந்தளூர் பஞ்சாயத்து தலைவர் ராஜூ தலைமையில் நடந்தது. துவக்கத்தில், மகளிர் மன்ற நிர்வாகி போதும் பொண்ணு வரவேற்றார்.முகாமில், சிறு தானியங் களான கேழ்வரகு, கம்பு, சோளம், வரகு அரசி, தினை, சாமை உட்பட பல்வேறு தானியங்கள் உற்பத்தி, பராமரிப்பு மகசூல் பற்றியும், சிறு தானிங்களுக்கு சந்தை வாய்ப்பு மற்றும் மதிப்பு பற்றியும் விரிவாக நபார்டு

மகளிர் உழவர் மன்ற நிர்வாகி வளர்மதி, முன்னோடி விவசாயி மற்றும் பயிற்றுநர் குமார், அண்ணாதுரை, மனையியல் வல்லுனர் மாலதி, வேளாண் விரிவாக்க அலுவலர் தமிழ்ச்செல்வி, சிநேகிதி திட்ட ஒருங்கிணைப்பாளர் சத்தியா, நாபின் திட்ட மேலாளர் வடிவேல், பகுதி ஒருங்கிணைப்பாளர் சித்ரா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோமளா உட்பட தொழில்நுட்ப வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர்.பயிற்சியில், தோகைமலை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதுநிலை மேலாளர் ரவி பேசியதாவது:விவசாயிகள் சிறுதானியங்களான கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை போன்ற ஊட்டச்சத்து மிகுந்த தானியங்களை சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம். இது போன்ற தானிய வகைகளுக்கு, சந்தையில் அதிக கிராக்கி உள்ளது. விவசாயிகள் சொட்டுநீர் பாசனம், புதிய மரபு சார்ந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தி இயற்கை முறையில் விவசாயம் செய்தால், நமக்கும், நம் சந்ததியினருக்கும் அதிக நன்மைகள் கிடைக்கும். விவசாயிகள் வீடு தேடிவந்து கடன் அளித்து, அதிகவட்டி வசூல் செய்யும் தனியார் நிதி நிறுவனங்களை நம்பி ஏமாறக் கூடாது. மேலும், அரசு மற்றும் பொதுத்துறை வங்கிகளில், விவசாயிகள் கடனுதவி பெற்று பயன் பெற வேண்டும்இவ்வாறு, ஐ.ஓ.பி., வங்கி முதுநிலை மேலாளர் ரவி பேசினார்.

## ரசாயன உரங்களின் தீமைகள் விவசாயிகளுக்கு விளக்கம்

பெரியகுளம் : பெரியகுளத்தில் பாரதிய கிசான் சங்க நகர் மற்றும் ஒன்றிய அறிமுக கூட்டம் மூத்த விவசாயி நெல்லையப்பர் தலைமயில் நடந்தது. விவசாயி சின்னத்துரை, ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தேனி மாவட்ட விவசாய சங்க தலைவர் பாண்டியன், பாரதிய கிசான் சங்க பொறுப்பாளர் கணேசன் ஆகியோர் ரசாயன உரங்களின் தீமைகள் பற்றியும் இயற்கை உரத்தின் நன்மை குறித்தும் பேசினர். மாநிலசெயலாளர் பார்தசாரதி, கோட்டப் பொறுப்பாளர் சோனைமுத்து, தேனி மாவட்ட பொறுப்பாளர் முருகன்,

துணைத்தலைவர் ராஜாராம்பாண்டியன் ஆகியோர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கம் குறித்து பேசினர். பெரியகுளம் நகர தலைவராக பாண்டியராஜன், துணைத்தலைவராக காமாட்சி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மாவட்டத்தில் இலவம்காய் விளைச்சல் பாதிப்பு! இலவம் பஞ்சு விலை அதிகரிப்பு

போடி : தேனி மாவட்டத்தில் கடந்த ஆண்டை காட்டிலும் இலவம்காய் விளைச்சல் குறைந்துள்ளதால் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்தவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இலவம் பஞ்சு விலை அதிகரித்துள்ளதால் கூடுதல் விலை கொடுத்து வாங்க வியாபாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். தேனி மாவட்டத்தில் போடி, குரங்கனி, கொட்டகுடி, வலசத்துறை, வடக்குமலை, வருஷநாடு உள்ளிட்ட பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரில் இலவம் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இலவம் விவசாயத்தை பொறுத்தவரை 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை நன்றாக இருந்தது. அதன் பின்னர் வறட்சி காரணமாக விளைச்சல் இல்லாமல் உள்ளது. பங்குனி, சித்திரை, வைகாசியில் காய்கள் விற்பனைக்காக மார்க்கெட்டிற்கு வரத்துவங்கிவிடும். தற்போது சீசன் முன்கூட்டியே துவங்கினாலும் காலம் தவறி பெய்த மழையின் காரணமாக கடந்த ஆண்டை காட்டிலும் விளைச்சல் பெரிதும் பாதிப்பு ஏற்டுத்தியுள்ளது. போதுமான அளவிற்கு விளைச்சல் இல்லாததினால் இலவம் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்தவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. விளைச்சல் குறைந்துள்ளதால் இலவம் பஞ்சு விலை கடந்த ஆண்டை காட்டிலும் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு விளைச்சல் மட்டுமின்றி விலையும் போதுமான அளவிற்கு இருந்தது. கடந்த ஆண்டு துவக்கத்தில் இலவம் விதை பஞ்சு கிலோ ரூ.45 முதல் 50, சில்லரையில் ரூ.40 முதல் 45 வரையும் இருந்தன. சீசன் முடியும் நிலையில் கிலோ ரூ.85 முதல் 95 வரையும் கொள்முதல் செய்யப்பட்டது. அரைத்த சுத்தமான இலவம் பஞ்சு

கிலோ ரூ.160 முதல் 180 வரை விலை போனது. சீசன் முடியும் நிலையில் ரூ.240 முதல் 280 வரை அதிகரித்திருந்தது. பருவம் தவறி பெய்த மழையின் காரணமாக இந்த ஆண்டு இலவம் காய் விளைச்சல் போதுமான அளவிற்கு இல்லாததினால் காய்கள் வரத்து குறைந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தற்போது சீசன் துவங்கியுள்ள நிலையில் இலவம் விதை பஞ்சு ரூ.65 முதல் 70 வரை விலை உள்ளது. சில்லரையில் ரூ.55 முதல் 60 வரை உள்ளது. அரைத்த சுத்தமான பஞ்சு தற்போது ரூ.260 முதல் 270 வரை அதிகரித்துள்ளது. வரத்து குறைந்துள்ளதால் மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஈரோடு, பவானி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து வியாபாரிகள் வருகை தர தயக்கம் காட்டி வருகின்றனர்.

## <u>மூல வைகை ஆற்றில் புதிய தடுப்பணைகள்</u>

வருஷநாடு : கடமலை-மயிலை ஒன்றிய பகுதிகளில் உள்ள வைகை ஆற்றில் ரூ.15 கோடி மதிப்பில் புதிய தடுப்பணைகள் கட்டப்பட வுள்ளதாக ஒன்றியக்குழுத் தலைவர் முருக்கோடைஇராமர் தெரிவித்தார். மூல வைகை ஆற்றின் உற்பத்தி இடமான வருஷநாடு, வாலிப்பாறை, காந்திக்கிராமம், அஞ்சரபுலி, கூடம்பாறை, வெள்ளிமலை ஆகிய பகுதிகளில் கடந்த மூன்று ஆண்டுகளாக போதிய மழை இல்லை. வைகை ஆற்றுப் படுகையில் உள்ள விவசாயிகள் தங்களது விவசாய நிலத்திற்கு நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயத்தினை கைவிட்டு வெளி மாநிலங் களுக்கு கூலி வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. இதனை தொடர்ந்து விவசாயிகள் சார்பில் மூல வைகை ஆற்றில் தடுப்பணைகள் கட்டவேண்டும் என மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்தனர். இதனை தொடர்ந்து கடந்தாண்டு ரூ. 4 கோடி மதிப்பில் வருஷநாடு, அம்பசாமுத்திரம், தற்போது ரூ.18 கோடி மதிப்பில் மணலாத்துக்குடிசை, கோவிந்தநகரம், கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஆகிய பகுதிகளில் புதிய தடுப்பணைகள் கட்டப்படுவதாக ஒன்றியக்குழுத்தலைவர் முருக்கோடைஇராமர் தெரிவித்தார்.

## மழையால் மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி

போடி : தேனி, போடி உள்ளிட்ட பகுதிகளில் வெயிலின் தாக்கம் அதிகரித்த வந்த நிலையில், நேற்று மாலை இடியுடன் பெய்த திடீர் கனமழையால் வறண்டு கிடந்த பூமி குளிர்ச்சி அடைந்தது. தேனி மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்த நிலையில் நேற்று மாலை மழை பெய்வதற்கான மேகம் சூழந்து மப்பும், மந்தாரமாக காணப்பட்டது. இந்நிலையில் போடி, குரங்கணி, தேவாரம் மற்றும் கேரளா பகுதியான பூப்பாறை, நெடுங்கண்டம், பாம்பாடும்பாறை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மாலை 6 மணியளவில் இடியுடன் கூடிய கனமழை பெய்ததால் வறண்டு கிடந்த பூமி குளிர்ச்சி அடைந்ததோடு, ஆற்றுப்பகுதியில் நீர்வரத்து துவங்கியது. கேரள பகுதியில் ஏலம், காபி, மிளகு உள்ளிட்ட பணப்பயிர்கள் பயிரிடப்பட்டிருந்த விவசாயிகளுக்கும், போடி பகுதி மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி மையம்; தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையம் முடிவு

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சை சாகுபடி மையம் ஒன்றை துவக்க புனேயில் உள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையம் முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டில் கம்பம் பள்ளத்தாக்கில் ஆண்டு முழுவதும் திராட்சை சாகுபடி நடைபெறுகிறது. திராட்சை சாகுபடியில் நிலையற்ற தன்மை, விலை கிடைக்காதது பெரிய அளவில் விவசாயிகளை கலங்க வைத்து வருகிறது. மேலும் செவட்டை நோய் தாக்குதலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.பனி மற்றும் மழை காலங்களில் விவசாயிகள் பெரிய இழப்பை சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் ஜூன் ல் தென்மேற்கு பருவ மழை துவங்கும். ஜூன் முதல் செப்டம்பர் வரை உலகில் எங்கும் திராட்சை வரத்து இருக்காது. கடந்த வாரம் புனேயில் உள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்ற விவசாயிகளிடம், தேசிய

திராட்சை நிலைய இயக்குனர் சாவந்த், ""ஜூன் ல் கம்பம் பகுதியில் விதையில்லா கருப்பு திராட்சை சாகுபடி செய்து தர முடியுமா," என்று கேட்டுள்ளார். அதற்கு விவசாயிகள், "ஜூன் முதல் செப்டம்பர் வரை சாகுபடி செய்ய முடியும்' என்று கூறியுள்ளனர். இதையடுத்து விவசாயி களுடன் இணைந்தும், தனியாகவும் சாகுபடி மையம் ஒன்றை கம்பம் பள்ளத்தாக்கில் அமைக்க தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையம் முடிவு செய்துள்ளது. ஆனைமலையன்பட்டியில் உள்ள திராட்சை ஆராய்ச்சி மைய தலைவர் பார்த்திபன் கூறுகையில், "புனே தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையம் ஜூன் ல் இங்கு திராட்சை சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளது. விவசாயிகளுடன் இணைந்து இந்த திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் நமது விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது" என்றார்.

## <u>மரக்கன்றுகள் வழங்கும் விழா</u>

பெரம்பலூர்:அ.தி.மு.க., பொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி, பெரம்பலூர் மாவட்ட ஜெ., பேரவை சார்பில், 1,067 பேருக்கு, மா, பலா, நெல்லி உட்பட, 14 வகையான பழ மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி பெரம்பலூரில் நடந்தது. நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஜெ., பேரவை செயலாளர் கார்த்திகேயன் தலைமை வகித்தார். பேரவை நிர்வாகிகள் ராம்குமார், துரை, பன்னீர்செல்வம், சண்முகம், சுந்தரராஜ் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், 1,067 பேருக்கு மரக்கன்றுகள் வழங்கினார். மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் சேகர், மாவட்ட நிர்வாகிகள் பூவைசெழியன், கிருஷ்ணகுமார், ஒன்றிய செயலாளர்கள் கர்ணன், கண்ணுசாமி, கிருஷ்ணசாமி, நகர செயலாளர் ராமச்சந்திரன், நகராட்சி தலைவர் ரமேஷ், பெரம்பலூர் யூனியன் சேர்மன் ஜெயக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ரூ. 49 லட்சத்திற்குமஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 49 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது.நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,017 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 10,299 ரூபாய், குறைந்த பட்சம், 7,699 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 8,275க்கும், குறைந்த பட்சம், 7,299 ரூபாய்க்கும் ஏலம்போனது. பனங்காலி ரகம், அதிக பட்சம், 18 ஆயிரத்து, 575க்கும், குறைந்த பட்சம், 15,864 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 49 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## கை கொடுத்தது: கசப்புபாகற்காய்

திருப்புவனம் : பூவந்தியில் கடந்த சில வருடங்களாக போதிய மழை இன்றி நெல் விவசாயம் நடைபெறவில்லை. கடந்த நவம்பரில் பெய்த மழை காரணமாக கண்மாய்களில் உள்ள சிறு சிறு பள்ளங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இந்த தண்ணீரை வைத்து 150 ஏக்கரில் கொடி பாகற்காய் பயிரிட்டுள்ளனர் விவசாயிகள். விவசாயி பிச்சை கூறுகையில்: திருப்புவனம், திருப்பாச்சேத்தி ஆகிய இடங்களில் சந்தை நடைபெறும் போது விற்பனை செய்வோம். மற்ற நாட்களில் வியாபாரிகள் வந்து கிலோ 25 ரூபாய் என வாங்கி செல்வார்கள் என்றார். போதிய மழை இல்லாததால் பள்ளங்களில் கிடக்கும் தண்ணீரை குடங்களில் எடுத்து வந்து செடிகளின் மீது தெளிக்கின்றனர். குறைந்த அளவு தண்ணீரில்

அதிக அளவு விளைச்சல் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் பலரும் பாகற்காய் நடவு செய்துள்ளனர்.

## கோடை மழையால் பருத்தி விளைச்சலில் உற்சாகம்

சிவகங்கை : மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கோடை மழை பருத்தி செடிக்கு ஊக்கம் அளிக்கும் என வேளாண் துறையினர் தெரிவித்தனர். மாவட்டத்தில் மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம் தாலுகாவில் ஆண்டுதோறும் 500 எக்டேரில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்து வந்தனர். கடந்த சில நாட்களாக போதிய மழையின்றி பருத்தி சாகுபடி பரப்பு குறைய துவங்கியுள்ளன. கடந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை பெய்ததால், வைகை பாசனம், கிணறு, கண்மாய் பாசனம் மூலம் விவசாயிகள் நெல் நடவு செய்து, ஜனவரியில் அறுவடை செய்துள்ளனர். நெல் அறுவடைக்கு பின்,கோடை பயிராக பருத்தி சாகுபடி செய்துள்ளனர். கோடையில் மழையை நம்பி பருத்தி நடவு செய்தாலும், மழை கைகொடுக்குமா என்ற சந்தேகத்தில், 2014 டிசம்பர் வரை இம்மூன்று தாலுகாவில் 230 எக்டேரில் மட்டுமே பருத்தி நடவு செய்துள்ளனர். கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. குறிப்பாக திருப்புவனத்தில் அதிக பட்ச மழை பதிவாகியுள்ளது. இதனால், பருத்தி நடவு செய்த விவசாயிகள் செடியை காப்பாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையில் உள்ளனர். வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""தற்போது பெய்யும் கோடை மழை பருத்தியின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும். இம்மழையால் ஏப்ரலில் பூக்கள் வெடிக்க துவங்கி மகசூல் கிடைக்கும்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இளநீர், தர்பூசணி விற்பனை மரக்காணத்தில் ஜோர்**

மரக்காணம், :விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் கடற்கரை ஓரம் அமைந்துள்ளது. இதனால் கடற்கரை காற்று நிலப்பகுதியை நோக்கி வீசுவதால் இப்பகுதியில் கத்திரி, அக்கினி நட்சத்திரம் போன்ற அதிகப்படியான கோடை வெயில் காலத்தில் கூட வெயில் தாக்கம் குறைவாகவே இருக்கும். இதனால் கோடை காலத்தில் பொதுமக்களுக்கு வரும் அம்மை போன்ற நோய்களின் தாக்கம் குறைவாகவே இருக்கும். இதன் காரணமாக விழுப்புரம், திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் கோடை காலத்தில் இப்பகுதியில் இருக்கும் உறவினர் வீடுகளில் வந்து தங்குவது வழக்கம். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்துவிட்டதால் ஏரி, குளம், குட்டை போன்ற முக்கிய நீர் நிலைகள் தண்ணீர் இல்லாமல் வறண்டது. இதனால் நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்து விட்டது. கோடை காலம் வழக்கமாக ஏப்ரல் மாதத்தில் தான் துவங்கும். ஆனால் இந்த ஆண்டு மார்ச் மாதமே தொடங்கிவிட்டது. இதுபோல் சுட்டெரிக்கும் கோடை வெயிலால் இப்பகுதி மக்கள், மாணவர்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். இந்த கோடை வெயிலில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள இளநீர், தர்பூசணி, மோர், கேழ்வரகு கூழ், வெள்ளரி போன்ற நீர் சத்து உள்ள உணவுப் பொருட்களை விரும்பி சாப்பிடுகின்றனர். இதனால் இவற்றின் விற்பனையும் படுஜோராக நடைபெற்று வருகிறது.

**அந்தியூர் ஒழுங்குமுறை கூடத்தில் ரூ.1 கோடிக்கு பொருட்கள் ஏலம்**

அந்தியூர், : அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் திங்கள் கிழமை தோறும் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெறும். நேற்று நடந்த ஏல விற்பனையில் 25 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு வந்து இருந்தன. இதில் தேங்காய் ஒன்று ரூ 5.20 முதல் 17.50 ரூபாய் வரை மொத்தம் 2 லட்சத்து 50 ஆயிரத்திற்க்கு ஏலம் போனது. தேங்காய்கள் பருப்பு 60 மூட்டைகள் வந்து இருந்தன. கிலோ ரூ 84.60 முதல் 96.70 வரை 2 லட்சத்திற்கு ஏலம் போனது. வெள்ளை எள் 30 மூட்டை கிலோ ரூ 71.26 முதல் 83.70 வரை 2 லட்சத்து 50 ஆயிரத்திற்க்கு ஏலம் போனது. ஆமணக்கு 4 மூட்டைகள் கிலோ ரூ 37.00 முதல் 50.70 வரை 10 ஆயிரத்திற்கும், மக்காச்சோளம் 20 மூட்டைகள், கிலோ ரூ 12.70 முதல் 13.30 வரை 26 ஆயிரத்திற்கும் ஏலம் போனது. பருத்தி பிடி காட்டன் ரகம் 7ஆயிரம் மூட்டைகள் வந்தன. கிலோ ரூ 38 முதல் 46 வரை 78 லட்சத்துத்துக்கும் ஏலம் போனது. நிலக்கடலை 1500 மூட்டைகள் விற்பனைக்கு வந்திருந்தன. இதில் பச்சை நிலக்கடலை கிலோ ரூ 21.20 முதல் 27 வரையிலும், காய்ந்த நிலக்கடலை கிலோ ரூ 31.50 முதல் 47 வரையிலும் 17 லட்சத்துத்துக்கு ஏலம் போனது. மொத்த விவசாய விளைபொருட்கள் ரூபாய் 1 கோடியே 1 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம்போனது.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.11.80 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை**

கோவை, :கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று (16ம் தேதி) நடந்த ஏலத்தில் ரூ.11.80 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது. கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள், வியாழன் தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள் 120 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 40 குவின்டாலும் என மொத்தம் 160

குவின்டால் விற்பனைக்கு வந்தது. இதை தொண்டாமுத்தூர், காளம் பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். விற்பனைக்கு வந்த மஞ்சள் அனைத்தும் விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவின்டால் ரூ.6,889 முதல் 7,576 வரையும், கிழங்கு மஞ்சள் ரூ.6,999 முதல் ரூ.7,286 வரையும் விற்றது. இதன் மூலம் விரலி மஞ்சள் சராசரி விலை ரூ.7,450. கிழங்கு மஞ்சள் சராசரி விலை ரூ.7,150. ஈரோடு, கோவை, பொள்ளாச்சி, பாலக்காட்டை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். மொத்த விற்பனை மொத்த மதிப்பு ரூ.11.80 லட்சம். இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.4.75 லட்சம் குறைவாகும். விரலி மற்றும் கிழங்கு மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.250 குறைந்துள்ளது.

**<u>வேளாண் கருவிகள் வழங்கும் மையம் அமைக்க விண்ணப்பிக்க அழைப்பு</u>**

திருப்பூர், : திருப்பூர் கலெக்டர் கோவிந்தராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: தமிழக சட்டப்பேரவையில் 110 விதியின்கீழ் தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வேளாண் கருவிகள், இயந்திரங்கள் வழங்குவதற்கான மையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை தமிழக முதல்வர் வெளியிட்டிருந்தார். இதன் முதற்கட்டமாக திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்டாரத்தில் வேளாண் கருவிகள் வழங்கும் மையம் அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. இதனடிப்படையில், விவசாயிகள் பங்களிப்பாக ரூ.15 லட்சமும், 40 சதவீத அரசு மானியம் ரூ.10 லட்சமும் சேர்த்து மொத்தம் ரூ.25 லட்சத்தில் வேளாண் கருவிகள் வாங்கி குறைந்த விலையில் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, திருப்பூர் மாவட்டத்திலுள்ள வட்டார விவசாயக்குழுக்கள், நீரினை பயன்படுத்து வோர் சங்கங்கள், சுயஉதவிக்குழுக்கள், கிராமத்திலுள்ள வேலையில்லாத வேளாண் மற்றும் வேளாண் பொறியியல் பட்டதாரி இளைஞர்கள், நபார்டு சங்கங்கள், டான்வாப், பண்ணை மகளிர் மேம்பாட்டுக் குழுக்கள் மற்றும் பங்களிப்பு செலுத்த வசதியுள்ள முன்னோடி விவசாயிகள்,

வட்டார அளவில் ஏதேனும் ஒரு குழு அல்லது முன்னோடி விவசாயிகள் மூலம் வேளாண் கருவிகள், இயந்திரங்கள் வழங்கி அரசு நிர்ணயிக்கும் வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. எனவே, இம்மாவட்டத்திலுள்ள முன்னோடி விவசாயிகள், விவசாயக்குழுக்கள், சங்கங்கள் வேளாண் கருவிகள் வழங்கும் மையம் அமைக்க விரும்பினால் திருப்பூர், பல்லடம், அவிநாசி, பொங்கலூர், ஊத்துக்குளி வட்டார பகுதியைச் சேர்ந்தவர்கள் உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, பல்லடம் சாலை, திருப்பூர் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்தையும், தாராபுரம், குண்டடம், மூலனூர், காங்கயம், வெள்ளக்கோயில் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, தளவாய்ப்பட்டினம் சாலை, தாராபுரம் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்தையும், உடுமலை, குடிமங்கலம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, எண்.34, 35 யசோதா ராமலிங்கம் லேஅவுட், உடுமலைப்பேட்டை என்ற முகவரி அலுவலகத்தையும் உடனடியாக அணுகிட வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

## திருச்செந்துறையில் இன்று வாழைத்தார் பொது ஏலம்

திருச்சி, : ஸ்ரீரங்கம் தாலுகா, திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற் றும் வணிகத்துறை சார்பில் வாழைத்தார் பொது ஏலம் இன்று (17ம் தேதி) நடை பெற உள்ளது. இந்த ஏலத் தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷன் இல்லா மல் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகி றது. வாழைத்தார் கொண்டு வரும் விவசாயிகள் இன்று காலை 11 மணிக்குள் முன் பதிவு செய்ய வேண்டும். திருச்சி மாவட்டம், அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங் களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும்

வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத் துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்கலாம்.

## மழைநீர் சேகரிப்பு துரிதப்படுத்த வேண்டும்

கரூர், : மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தும் திட்டம் துரிதப்படுத்த வேண்டும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர். மழைநீர் சேகரிப்பு திட்டம் கரூர் நகராட்சி, பேரூராட்சி, பஞ்சாயத்து நிர்வாகம் சார்பில் செயல்படுத்தப்படுகிறது. இதுதொடர்பாக விழிப்புணர்வு கூட்டம், விழிப்புணர்வு பேரணி, துண்டு பிரசுரம் என தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக மழையின்றி கரூர் மாவட்டம் வறட்சி நிலையில் இருந்து வந்தது. கடந்த 2014ம் ஆண்டு சமீப ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நல்ல மழை பெய்தது. சராசரி மழை அளவினை கடந்த சில ஆண்டுகளாக எட்டாத நிலைமை இருந்தது. ஆனால் கடந்த ஆண்டை பொறுத்தளவில் கோடை மழையும், பருவ மழையும் நன்றாக பெய்தது. கர்நாடக அணைகள் நிரம்பியதால் காவிரியில் நீர்வரத்து இருந்தது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில பெய்த மழை காரணமாக அமராவதி ஆற்றிலும் தண்ணீர் வந்தது. இதன்காரணமாக மாவட்டத்தில் குறைந்து கொண்டே சென்ற நிலத்தடிநீரின் அளவும் அதிகரித்தது. அனைத்து வீடுகள், அரசு அலுவலகங்கள், வணிக வளாகங்கள் என அனைத்து பகுதியிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இப்பணியினை முழுமையாக மேற்கொள்ளவில்லை. மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை ஏற்படுத்தாததால் மழைநீரை முழுமையாக சேகரிக்க முடியவில்லை. அமராவதி ஆற்றில் சீத்தைமுட்கள் அதிகம் காணப்படுவதால் மழைநீர் மற்றும் வெள்ளநீர் சீத்தைமுட்களால் உறிஞ்சப்பட்டன. பெருவெள்ளத்திற்கு பின்னரே ஆற்றில் சீத்தை முட்செடிகள் அகற்றப்பட்டன.இனியாவது அனைத்து பகுதியிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை முறையாக அமைக்க வேண்டும். மந்த

நிலையில் உள்ள மழைநீர் சேகரிப்பு திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும். பல இடங்களில் சேகரிப்பு குழிகளை முறைப்படி அமைக்கவில்லை. பெயரளவில் இருக்கும் குழிகளை கண்டறிந்து நீர்சேமிக்கும் வகையில் அமைக்க வேண்டும். அரசு துறைகள், அரசு சார்ந்த அனைத்து துறைகளிலும் முதல்கட்டமாக மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்யவேண்டும். இல்லாத இடங்களில் தொட்டிகளை கட்டி அமைப்பினை ஏற்படுத்தவேண்டும். வரும் காலங்களில் மழை பெய்தால் அதனை சேமிக்கும் வகையில் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். நகராட்சி அதிகாரிகளிடம் இதுகுறித்து கேட்டபோது,மழைநீர் சேகரிப்பு திட்டம் குறித்த விழிப்புணர்வு பிரசாரங்கள் விநியோகம் செய்யப்பட்டது. அனைத்து கட்டிடங்களுக்கும் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை ஆய்வு செய்ய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட்டுள்ள எந்த ஒரு கட்டிடத்திலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி இருப்பதை ஆய்வு செய்த பின்னரே வரிவிதிப்பு செய்யப்படும். குடிநீர் இணைப்பு, கட்டிட அனுமதி வேண்டி நகராட்சியில் விண்ணப்பிக்கும் போது மழைநீர் தொட்டி உள்ளது என்பதற்கான போட்டோ இணைத்தால் மட்டுமே மேற்படி விண்ணப்பத்தின் மீது மேல்நடவடிக்கை எடுக்கப்படும். தமிழக அரசின் அவசர சட்டப்படி, மழைநீர் சேகரிப்பு இல்லாவிட்டால். அதனை புதிதாக ஏற்படுத்தும் வரையில், குடிநீர் இணைப்பினை துண்டிக்கவும் வழி இருக்கிறது. இதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்றனர்.

## <u>கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்</u>

பெரம்பலூர்,: பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான தடுப்பூசி போடும் முகாம் இன்று(17ம்தேதி) தொடங்குகிறது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவித்திருப்ப

தாவது : கால்நடைகளை கடுமையாகத்தாக்கி பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதும் கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பினை ஏற்படுத்தக் கூடியதுமான கால் மற்றும் வாய் நோய்க்கான தடுப்பூசி 8வது சுற்று பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து கிரா மங்களிலும் மார்ச் 1ம்தேதி முதல் போடப்பட்டு வருகிறது. கால்நடை வளர்ப்போர் தங்களது கிராமத்தில் நடைபெறும் தடுப்பூசிமுகாமிற்கு தங்களது கால்நடைகளை கொண்டு சென்று தடுப்பூசி போட்டு பயன்பெற வேண்டும். இதன்படி இன்று (17ம்தேதி) துறைமங்கலம், அரணாரை, தம்பிரான்பட்டி, திருவாளந்துறை, அகரம், குரும்பலூர், மறவாநத்தம், அத்தியூர், கிழுமத்தூர், ரசலாபுரம், மாவிலிங்கை ஆகிய கிராமங்களில் நடக்கிறது. 18ம்தேதியன்று எளம்பலூர், வெள்ளுவாடி, காந்திநகர், கைபெரம்பலூர், வயலப்பாடி, பூங்காநகர், பாடாலூர் மாரியம்மன்கோவில், என்எஸ்பி நகர், இந்திராநகர் ஆகிய கிராமங்களில் முகாம் நடக்கிறது. 19ம்தேதியன்று செங்குணம், அருமடல், பாலம்பாடி, ரெங்கநாதபுரம், கை.களத்தூர், சிறுநிலா, பெருநிலா, பசும்பலூர், கீழப்பெரம்பலூர் வடக்கு, தெற்கு, பெரியார்நகர், திருவளக்குறிச்சி, ஊத்தங்கால் ஆகிய கிராமங்களிலும், 20ம்தேதியன்று கவுல்பாளையம், ரெங்கநாதபுரம் தெற்கு, பிரம்மதேசம், வாலிகண்டபுரம், மேட்டுக் காளிங்கராயநல்லூர், பள்ளக் காளிங்கராய நல்லூர், வசிஷ்டபுரம், அகரம்சிகூர், வயலூர், கருப்பட்டாங்குறிச்சி, அகரம்சிகூர் பார்டர், ஜமீன்ஆத்தூர், நாரணமங்கலம், விஜயகோபாலபுரம் ஆகிய கிராமங்களிலும் தடுப்பூசி போடப்பட உள்ளது. 21ம்தேதியன்று குரும்பலூர், மூலக்காடு, புதுநடுவலூர், எறையூர், பேரையூர், மங்கலமேடு, ரஞ்சன்குடி, பனங்கூர், மருவத்தூர், பேரளி, மருதடி,தெரணி ஆகியக் கிராமங்களில் முகாம் நடைபெறுகிறது, 22ம்தேதி பெரியவடகரை, பி.மாவிலங்கை, பாண்டகப்பாடி, ஒதியம், சித்தளி, லட்சுமிபுரம்,அசூர், காரை, புதுக்குறிச்சி ஆகிய கிராமங்களிலும் கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி

போடப்படுகிறது. எனவே அனைத்து கால்நடை வளர்ப்போரும் முகாமிற்கு தங்களது கால்நடைகளைக் கொண்டுசென்று தடுப்பூசிபோட்டு பயன்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## 62 விவசாயிகளுக்கு மண்வள அட்டை

பாபநாசம், : பாபநாசத்தில் இயற்கை உழவர் மன்றம் மூலம் 62 விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டது. பாபநாசம் விவேகானந்தா வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மையம், அம்மாப் பேட்டை ஒன்றிய வேளாண்மை துறை இணைந்து பாபநாசம் அருகே இரும்புத்தலையில் இயற்கை உழவர் மன்றத்தின் மூலம் 62 விவசாயிகளு க்கு மண்வள அட்டை வழங்கப்பட்டது. இரும்புத்தலை நூலக கட்டிட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆடுதுறை மண் பரிசோதனை ஆய்வு கூடத்தின் அலுவலர் ராதா விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் ஊராட்சி தலைவர் பாலுமணி முன்னிலை வகித்தார். மன்ற ஒருங்கிணைப்பாளர் கோபிநாத் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக விவேகானந்தா வேளாண் அலுவலர் வேல்முருகன், வேளாண் உதவி அலுவலர் சதீஷ்குமார் ஆகியோர் கலந்து கொ ண்டனர். சாலியமங்கலம் விவேகானந்தா கிளை அமை ப்பின் பொறுப்பாளர் சுசிலா சீனிவாசன் நன்றி கூறினார்.

## கோமாரி தடுப்பூசி முகாம்

பாபநாசம், : பாபநாசம் அருகே வழுத்தூரில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. 400 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. முகாமில் அய்யம்பேட்டை கால் நடை உதவி மருத்துவர் செல்வகுமார், ஊரா ட்சித் தலைவர் தமிழ்ச்செல்வன், செயலர் கலையரசன் கலந்து கொ ண்டனர். உத்தாணி யில் நடைபெற்ற முகாமில் 250 மாடுகளுக்கு தடுப்பூசிபோடப்பட்டது.

**விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்**

திருத்துறைப்பூண்டி,: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி லயன்ஸ் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் பொறியாளர் கைலாசநாதன் தலைமை யில் நடைபெற்றது. கூட்டத்தில் பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம், ஒரு விவசாயிக்கு கைதெளிப்பான், மற்றும் விவசாயிகளுக்கு உபகரணம் வழங்கப்பட்டது. கூட்டத்தில் முன்னாள் தலைவர்கள் நாராயணசாமி, சுரேஷ், அசோக்குமார், சங்கர்கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். செயலர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

**நீடாமங்கலம் அருகே கல்லூரி மாணவிகள் கிராமங்களுக்கு சென்று வேளாண் பயிற்சி**

நீடாமங்கலம், : தஞ்சையில் இயங்கும் மத்திய அரசு நிறுவனமான இந்திய பயிர் பதன தொழில் நுட்ப நிலையத்தில் பி.டெக் இறுதியாண்டு படிக்கும் 16 மாணவிகள் கிராம திட்டத்தில் பயிற்சி பெற நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தங்கி கிராமங்களுக்கு சென்று 2 வார பயிற்சி பெற்று வருகின்றனர். தமிழ்நாடு, புதுச்சேரி, மகாராஷ்டிரா, கேரளா மாநிலத்தை சேர்ந்த மாணவிகள் இந்திய பயிர் பதன தொழில் நுட்ப கல்லூரி இயக்குனர் சிங்காரவடிவேல் உத்தரவுப்படி, உதவி ரோசிரியை மீனாட்சி வழிகாட்டுதல் படி பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளின் பண்ணைகளில் நடைபெறும் விவ சாய பணிகளை விளக்கி வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் பயிற்சி அளித்து வருகிறார். பயிற்சியின் ஒரு பகுதியாக வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சூடோமோனாஸ் பயிர் பாதுகாப்பு மருந்து தயாரித்தல், உயிர் உர உற்பத்தி நிலையத்தில் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா, ரைசோபியம் தயாரித்தல், அரசு விதைப்பண்ணை காஞ்சிகுடிகாட் டில் விதை சுத்திகரிப்பு பணி ஆகியவற்றை பார்வையிட்டு பயிற்சி பெற்றனர். பயிற்சியின் ஒருபகுதியாக திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து காண்பித்தனர். பயிற்சி பெறும்

மாண விகளை இணை பேராசிரியர் கவிதாஅபிராமி ஆய்வு செய்தார். உதவிபேராசிரியர்கள் காமராஜ்,கவிதாஸ்ரீ உடனிருந்தனர். ஏற்பாடுகளை நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சோழன், முனைவர்ரமேஷ்செய்திருந்தனர்.

**வைகை அணை நீர்மட்டம் உயர்வு**

கூடலூர், : தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக பெய்த மழையால் வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நீர்ப்பிடிப்பு பகுதியில் மழையில்லாததால் பெரியாறு அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 111.40 அடியாக இருந்தது. நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 63 கன அடியாக குறைந்துள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 250 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 1,134 மில்லியன் கனஅடி. தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் 71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் 35.20 அடியாக உள்ளது. நேற்றுமுன்தினம் வினாடிக்கு 76 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை வினாடிக்கு 146 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 60 கனஅடியாக உள்ளது. அணையின் இருப்புநீர் 618 மில்லியன் கனஅடியாக உள்ளது. 57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 29.40 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து இல்லை. வெளியேற்றமும் இல்லை. அணையின் இருப்புநீர் 71.30 மில்லியன் கன அடியாக உள்ளது.126 அடி உயரமுள்ள சோத்துப் பாறை அணையின் நீர்மட்டம் 73.30 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 5 கன அடியாக உள்ளது. அணை யிலிருந்து வினாடிக்கு 5 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப் படுகிறது. அணையின்

இருப்பு நீர் 32.92 மில்லியன் கன அடியாக உள்ளது.

**மார்ச் 20ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திண்டுக்கல், : விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 20ம் தேதி (வெள்ளி) நடைபெற உள்ளது. கலெக்டர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெற உள்ள இக்கூட்டத்தில் பல்வேறு துறை உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் குறித்து விவாதிக்க உள்ளனர். எனவே விவசாயிகள் இந்த கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு, தங்கள் குறைகளை நேரில் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

**யானைகளின் உணவுக்காக வனப்பகுதியில் மூங்கில் கன்றுகள் வளர்க்க திட்டம்**

பழநி, : யானை களின் உணவுக்காக வனப்பகுதிகளில் மூங்கில் கன்று கள் வளர்க்க வனத்துறை திட்டமிட்டுள்ளது. பழநி மற்றும் ஒட்டன் சத்திரம் வனப்பகுதியை ஒட்டிய மலைக்கிராமங்களில் உள்ள விளைநிலங்களுக்கு கேரள வனப்பகுதியில் இருந்து வருகை தரும் யானைகள், அப்பகுதியில் உள்ள வீடுகளை தள்ளியும், மா, தென்னை, வாழை, நிலக்கடலை, மக்காச்சோளம் போன்ற பயிர் வகைகளை சேதப்படுத்தி யும் நாசம் செய்து வருகின்றன. இதனால் மலைக் கிராமங்களில் உள்ள விவசாயிகள் மாலை வேளைக ளில் ஊருக்குள் வந்துவிடுகின்றனர். யானை களின் அட்டகாசத்தை தடுக்க அதிக ஒளிச்செறிவு கொண் ட விளக்குகளைப் பயன்படுத்துதல், பட்டாசுகள் வெடித்தல், அகழி அமைத் தல், சோலார் மின்வேலி அமைத்தல் போன்ற பணிகளில் வனத்துறையினர் ஈடுபட்டனர். இருப்பினும் போதிய பலன் கிடைக்கவில்லை. இந்நிலையில் சோலார் மின் வேலி மற்றும் அகழிகளை சரிவர பராமரிக்காததால் வேலியை உடைத்துக் கொண்டு யானைகள் விவ சாய நிலத்திற்குள் மீண்டும் புகுந்துவிட்டன. எனவே யானைகளை விரட்ட வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். யானைகள் நுழைவதை

தடுக்கும் வகையில் வனப்பகுதிக்குள் தடுப்பணை, கீழ்நிலை குடிநீர் தொட்டி போன்ற வை அமைக்கும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தற்போது வனப்பகுதியில் யானைகள் உண்ணுவதற்காக மூங்கில் போன்றவகளை வளர்க்க திட்டமிட்டுள்ளனர். இதுகுறித்து பழநி வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது, 'யானைகள் குடிநீர் மற்றும் உணவு தேடித்தான் விளைநிலங்களுக்குள் புகுந்து விடுகின்றன. இதனை தடுக்க வனப்பகுதியில் யானைகள் அதிகம் உலாவும் இடங்களில் தடுப்பணை மற்றும் குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதுபோல் உணவுக்காக மூங்கில், பூவரசன், குமுது மற்றும் நாசல் போன்றவைகள் வளர்க்கப்பட உள் ளன. இவ்வாறு கூறினர்.

## திருப்புவனத்தில் பலத்த மழை

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக திருப்புவனத்தில் நேற்று முன்தினம் இரவு 40.2 மி.மீ மழை பெய்துள்ளது. நேற்று காலையிலும் திருப்புவனத்தில் 20.2 மி.மீ மழை பதிவானது. குறைந்தபட்சமாக காரைக்குடியில் 6.2 மி.மீ மழை பதிவாகியுள்ளது. மானாமதுரையில் 9 மி.மீ, சிவகங்கையில் 23 மி.மீ, திருப்புத்தூரில் 17 மி.மீ, இளையான்குடியில் 25 மி.மீ, தேகோட்டையில் 10.3 மி.மீ மழை பெய்துள்ளது. கடந்த சில நாட்களாக கோடை வெயில் மக்களை வாட்டி எடுத்தது. இரண்டு நாட்களாக பெய்து வரும் சாரல் மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## எட்டயபுரத்தில் விவசாய கருத்தரங்கம்

எட்டயபுரம், : எட்டயபுரத்தில் முன்னாள் எம்எல்ஏ அழகர்சாமியின் 6வது நினைவு தினத்தையொட்டி விவசாய கருத்தரங்கம் நடந்தது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க எட்டயபுரம் தாலுகா செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். தலைவர் ரெங்கசாமி, சீனிவாசன் முன்னிலை

வகித்தனர். மாவட்ட குழு உறுப்பினர் ராமசுப்பு வரவேற்றார். முன்னாள் எம்பி அப்பாதுரை இன்றைய அரசியலில் விவசாயிகள் நிலை என்ற தலைப்பிலும், வேளாண் வல்லுனர் பாமையன் ஏரின்றி அமையாது உலகு என்ற தலைப்பிலும் பேசினர். எட்டயபுரத்தை தலைமயிடமாக கொண்டு ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டும், 2013-14ம் ஆண்டிற்கான காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீடு தொகை வழங்க வேண்டும். விளைபொருட்களுக்கு உற்பத்தி செலவை விட 50 சதவிகிதம் விலை கூடுதலாக நிர்ணயம் செய்யவேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரமான நிலம் கையகப்படுத்தும் அவசர சட்டத்தை அரசு கைவிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் நல்லையா, தலைவர் ராமையா, ஏஐஒய்எப் மாவட்ட செயலாளர் பாலமுருகன், எட்டயபுரம் பேரூராட்சி தலைவர் கோவிந்தராஜபெருமாள், முன்னாள் எம்எல்ஏ அய்யலுசாமி, ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பறக்கை மீன் ஆராய்ச்சி மையத்தில் மீன்வளர்ப்பு பயிற்சி நாளை தொடங்குகிறது**

நாகர்கோவில், : பறக்கை மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: பறக்கையில் உள்ள மீன்வள ஆராய்ச்சி மையத்தில் மீன்வளம் சம்பந்தப்பட்ட இலவச பயிற்சி முகாம் நடந்தது. தற்போது கூட்டு மீன்வளர்ப்பு என்ற தலைப்பில் பயிற்சி முகாம் 18ம் தேதி(நாளை) தொடங்கி 20ம் தேதி வரை நடக்கிறது. இம்முகாமில் நன்னீர் வளர்ப்பு, கட்லாக் கெண்டை, ரோகு கெண்டை, மிர்கால் கெண்டை, சாதாக் கெண்டை, புல்கெண்டை, வெள்ளிக் கெண்டை போன்றவை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு பற்றி விரிவாக பாடம் நடத்தப் படும். மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், பறக்கை என்ற முகவரியில் கலந்து கொள்ள லாம். மேலும் விவரங்களை அறிய 0462-286107 என்ற தொலைபேசி எண்ணில் தொடர் கொள்ளும்படி

கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**குமரியில் சாரல் மழை நீடிப்பு பெருஞ்சாணி அணை மூடல்**

நாகர்கோவில், :குமரி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. நேற்றும் பிற்பகல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் கனமழை காணப்பட்டது. மாவட்டத்தில் நேற்று காலை வரை அதிகபட்சமாக மயிலாடியில் 26 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை 7.2, பெருஞ்சாணி 12.2, சிற்றார்-1ல் 13.4, சிற்றார்-2ல் 14.2, ஆனைக்கிடங்கு 3, குளச்சல் 10, குருந்தன்கோடு 5.4, புத்தன் அணை 12, திற்பரப்பு 6.8, நாகர்கோவில் 22, பூதப்பாண்டி 11.2, சுருளோடு 11.6, கன்னிமார் 18.2, ஆரல்வாய்மொழி 10.6, பாலமோர் 7.4, கொட்டாரம் 24.6 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 26.25 அடியாக இருந்தது. அணைக்கு 87 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பெருஞ்சாணி நீர்மட்டம் 59.85 அடியாக இருந்தது. அணைக்கு 124 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் 180 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. சிற்றார்-1ல் 5.77 அடி நீர்மட்டம் காணப்படுகிறது. அணைக்கு 20 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. சிற்றார்-2ல் 5.87 அடி நீர்மட்டம் காணப்படுகிறது. அணைக்கு 33 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பொய்கையில் 9.80 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 50.90 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. குமரி மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் பாசனத்திற்காக திறக்கப்பட்ட அணைகள் பிப்ரவரி மாத கடைசியில் மூடப்படுவது வழக்கம். இந்த ஆண்டு மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் மாசி கொடை விழாவையொட்டி தண்ணீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த நிலையில், பேச்சிப்பாறை அணை மூடப்பட்டது. பெருஞ்சாணி அணையும் நேற்று மாலை மூடப்பட்டது. நாகர்கோவில்

நகர பகுதிக்கு குடிநீர் வழங்கி வருகின்ற முக்கடல் அணை நீர்மட்டம் 16.60 அடியாக இருந்தது. நேற்று அணை பகுதியில் 12 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது. கோடையில் குடிநீர் பற்றாக்குறையை போக்க தேவை ஏற்பட்டால் வழக்கம்போல் பெருஞ்சாணி அணையில் இருந்து அனந்தனார் கால்வாயில் வினாடிக்கு 50 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று பொதுப் பணித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.